தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழகத் தோழர்கள் கோபாலபுரம் ஜெயகோபி, சதீஷ்குமார் ஆகியோரின் தாயார் திருமதி. பொன்னியம்மாள் அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று (22.09.2025) கோபாலபுரத்திலுள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா. எழிலன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்பு ஆகியோர் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 215 வது நாள்!

திரு.வி.க. நகர் தெற்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,செப்.23-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 215 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (22.09.2025), திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 75 அ, எஸ். எஸ் புரம். 2) வட்டம் 75 அ, சத்தியமூர்த்தி நகர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாடுவாரியகுடியிருப்பு, ஓட்டேரி. சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ் நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துள சிங்கம், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ்செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம். தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர். ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து

தருமபுரி மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனை - ஆய்வுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி , செப். 23 -

வாக்காளர் பட்டியல் சிறப்புதீவிரதிருத்தம் (SIR) குறித்து தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பாக ஆலோசனை மற்றும் ஆய்வுக்கூட்டம் நடைபெறுகிறது என மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மண்டல பொறுப்பாளர், பொதுப்பணி, நெடுஞ்சாலைமற்றும் சிறுதுறை முகங்கள் துறைஅமைச்சர் எ.வ.வேலு; ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் படி தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பாக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் Special Intensive Revision (SIR) குறித்தும், கூடுதல் வாக்குச் சாவடிகள் அமைவதுகுறித்தும் தருமபுரி மேற்கு மாவட்ட நிர்வாகிகளுக்கான ஆலோசனை மற்றும் ஆய்வுக்கூட்டம்.

தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் மற்றும் பாலக்கோடுஆகியசட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட சட்டமன்ற தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளர்கள், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் மற்றும் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அவர்களுக்கான ஆலோசனை மற்றும் ஆய்வுக்கூட்டம் மாவட்ட கழகசெயலாளர் முனைவர் பி.பழனியப்பன்; முன்னிலையிலும், மாவட்ட வழக்கறிஞர் அணிஅமைப்பாளர் வழக்கறிஞர்.வு.சந்திரசேகர்; தலைமையிலும் நடைபெறும். இக்கூட்டத்தில் வாக்குச்சாவடிவாரியாகவாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் Special Intensive Revision (SIR) செயல்படுத்துவதை வாக்குச்சவாடி முகவர்கள் (BLA 2 அப்பணியில் ஈடுபடுத்தி ஆய்வுசெய்வது குறித்தும், கூடுதல்வாக்குச்சாவடிகள் அமைவது குறித்தும் நிர்வாகிகளுக்கு கீழ்கண்ட தேதி மற்றும் இடங்களில் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

தேதி - நாள் - நேரம் - சட்டமன்றத் தொகுதி - கூட்டம் நடைபெறும் இடம்

24.09.2025 - புதன் - காலை 10.00 மணிக்கு பாப்பிரெட்டிப்பட்டி - எம்.சி.எஸ். மஹால், கடத்தூர்.

பிற்பகல் 2.00 மணிக்கு அரூர் என்.என் மஹால், அரூர்

25.09.2025 - வியாழன் காலை 10.00 மணிக்கு பாலக்கோடு மாவட்ட கழக அலுவலகம், காரிமங்கலம்

இக்கூட்டத்தில் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், சட்டமன்றத் தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளர்கள், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் மற்றும் தருமபுரி மேற்கு மாவட்ட, சட்டமன்றத் தொகுதி வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வில்லியனூர் அரசு மருத்துவமனையில்

பெண்களுக்கான மாபெரும் சுகாதாரத் திருவிழா!

புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா துவக்கி வைத்தார்!

புதுவை, செப். 23 –

புதுச்சேரி அரசு சுகாதாரத் துறை மூலம் வில்லிய னூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒன்றிய அரசின் ‘ஆரோக்கியமான பெண்களே குடும்பத்தின் பலம்’ என்ற தலைப்பில் பெண்களுக்கான மாபெரும் சுகாதார திருவிழா டாக்டர் பாமகள் கவிதை தலைமையில் நடை பெற்றது. நிகழ்ச்சிக்கு பொது சுகாதாரத் துறை துணை இயக்குனர் டாக்டர் ஷமீமு நிஷா, குடும்ப நல துணை இயக்குனர் டாக்டர் அனந்தலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வில்லியனூர் சட்டமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா சிறப்பு விருந்தின ராக கலந்து கொண்டு, பெண்களுக்கான இலவச மருத்துவ முகாமை துவக்கி வைத்து, கண் மற்றும் காது பரிசோதனை செய்து கொண்டார்.

முகாமில், பொது சுகாதார சேவைகளான நீரிழிவு, ரத்த அழுத்தம், ரத்த பரிசோதனைகள், காசநோய், வாய், மார்பக, கர்ப்ப வாய் புற்றுநோய் பரிசோதனைகள், பல் மருத்துவம் மற்றும் ஆலோசனைகள், கண், மனநலம், இருதயம், காது மூக்கு தொண்டை, பொது அறுவை சிகிச்சை, தோல் மருத்துவம், வளர் இளம் பருவ மருத்துவ ஆலோசனை, குழந்தைகளுக்கான தடுப்பூசி, உடல் பருமன் பரிசோதனை அந்தந்த துறை சார்ந்த சிறப்பு மருத்துவ வல்லுனர்களால் சிறந்த முறையில் ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்பட்டது.

மேலும் ஆயுஷ் இயக்குனரகம் சார்பில் ஹோமியோபதி, ஆயுர்வேத, சித்த மருத்துவம் நடைபெற்றது. உடல்நலம் மற்றும் ஆரோக்கியம் பற்றிய விளக்கங்களும், ஊட்டச்சத்து உணவுகளுக்கான விளக்கங்களும், மாதவிடாய் சுகாதாரம் பற்றிய விளக்கங்களும், புற்றுநோய்க்கான பரிசோதனையின் அவசியங்கள் பற்றிய விளக்கங் களும் வழங்கப்பட்டன. முகாமில், 70 வயது மேற்பட்டவர்களுக்கு இலவச மருத்துவ காப்பீடு, சிவப்பு அட்டைதாரர்களுக்கான இலவச மருத்துவ காப்பீடு சுகாதார அடையாள எண் பதிவு செய்தும் வழங்கப்பட்டது. இம்மாபெரும் சுகாதாரத் திருவிழாவில் 500க்கும் மேற்பட்ட பெண்கள், மூத்த குடிமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இந்த சுகாதார திருவிழாவில் பக்கவாதம், பச்சிளம் குழந்தை அவசர நிலை, பிரசவத்திற்கு பின் ஏற்படும் அதிக ரத்தப்போக்கு, கர்ப்ப கால உயர் ரத்த அழுத்த நிலை, விபத்து தீக்காயம் அல்லது தீ விபத்து, மாரடைப்பு, நெஞ்சு வலி, விஷத்தன்மையின் அறிகுறிகள் மற்றும் முதலுதவிகள் பற்றிய விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் முகாமில் கலந்து கொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

இச்சுகாதார திருவிழா விற்கான ஏற்பாடுகளை வில்லியனூர் ஆரம்ப சுகாதார மையத்தின் தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் பாமகள் கவிதை தலைமையில் மருத்துவர்கள், பெண் சுகாதார மேற்பார்வையாளர், செவிலிய அதிகாரிகள், கிராமப்புற செவிலியர்கள், சுகாதார உதவி ஆய்வாளர்கள், சுகாதார ஆய்வாளர், ஆஷா பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மருத்துவமனை ஊழியர்கள் இணைந்து சிறப்பாக செய்திருந்தனர்.

நடிகவேள் எம்.ஆர்.ராதா துணைவியார்

கீதா ராதா மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை. செப். 23-

நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களின் மனைவி கீதா ராதா அவர்கள் மறைவுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களுடைய மனைவி திருமிகு. கீதா ராதா அவர்கள் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது பிரிவால் வாடும் சகோதரி திருமதி. ராதிகா சரத்குமார் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

பெரம்பூர் தொகுதி 34 வது வட்டம் வேதாந்த முருகப்ப நாயக்கர் தெருவில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம் எல் ஏ ஆய்வு மேற்கொண்டு மக்களின் குறைகளை கேட்டு பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளை கேட்டு கொண்டார். உடன் அ.முருகன், எஸ்.ஆர்.கமலகண்ணன், மாமன்ற உறுப்பினர் க.சர்மிளாகாந்தி, கே.வி.இராஜன், உள்பட மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை நங்கநல்லூர் 100 அடி சாலையில் உள்ள விளையாட்டு திடலில் 167 வது வட்ட திமுக சார்பில் ஆதார் அட்டைசிறப்பு முகாம் வட்ட செயலாளர் ஜெ.நடராஜன், 167வது வார்டு மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்த முகாமில் ஆதார் அட்டையில் பிழைகள், பெயர், முகவரி, செல்போன் எண் மாற்றம், குழந்தைகளுக்கான புதிய அட்டை போன்ற பணிகள் நடந்தது. இந்த முகாமை நடிகர் போஸ் வெங்கட் பார்வையிட்டு மக்கள் ஆதார் அட்டை திருத்தங்களுக்காக அலையும் நிலையில் சிறப்பு முகாம் நடத்தி தீர்வு காண செய்ததற்கு நன்றி தெரிவித்து பாராட்டினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோ. வாசுதேவன்

செப்டம்பர் 23 (2023)

இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

செவ்வாய்ப்பேட்டை கிளை செயலாளராகவும், அவைத்தலைவராக பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறவழிப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

தி.மு.க. மாணவர் அணி

மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

கோவை வடக்கு மாவட்டம்

கோவை வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட இ.எம்.எஸ். ரபீதின் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **ச. ராஜ் திலக்** (5/10, சென்னிவீரம்பாளையம், சிக்கராம்பாளையம், காரமடை, கோவை) அவர்கள் கோவை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

தென்காசி வடக்கு மாவட்டம்

தென்காசி வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட டி. தினேஷ்குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **எஸ். வீமராஜ்** (48ஏ, தெற்கு தெரு, மடத்துப்பட்டி, சங்கரன்கோவில், தென்காசி) அவர்கள் தென்காசி வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22-09-2025.

இரா. ராஜீவ்காந்தி
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி